10th February 1959]

கூடிய சீக்கிரம் நிலச் சீர்திருத்த சட்டம் வரப்போவதால் அதிகமான அளவில் நிலங்கள் கிடைக்கும், அதில் விதைப் பண்ணைகளை நடத்துவதற்கு சௌகரியமாக இருக்கும் என்று அரசாங்கம் ஏற்கனவே முடிவு செய்திருக்கிறது.

* 182 *Q.*—SRI A. GOVINDASAMY : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்ட சீமாவரம் சர்க்கார் விதை பண்ணைக்கு எவ்வளவு நிலம் குத்தகைக்கு எடுக்கப்பட்டது ?

(ஆ) எப்பொழுது குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது ?

(இ) குத்தகைத் தொகை எவ்வளவு ?

(ஈ) நீர்ப்பாசன வசதியிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 33·50 acres.

(*b*) 1st March 1958.

(*c*) The lease amount has not yet been finalised.

(*d*) Yes.

SRI A. GOVINDASAMY : ஸார், இதில் குத்தகைய நிர்ணயம் செய்வதற்கு காலம் கடத்துவதின் ரகசியம் என்ன ? நீர்ப்பாசன வசதி இல்லாத இந்த நிலத்தை அவசர அவசரமாக எடுத்துக் கொண்டதன் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னிடம் இருக்கின்ற தகவலின்படி இந்த இடத்தில்தான் நீர்ப் பாசன வசதியிருக்கிறது. இதன் பேரில் குத்தகை நிர்ணயம் செய்ததில் கலெக்டருடைய ரிப்போர்ட்டுக்கும் விவசாய இலாகா அதிகாரிகளுடைய ரிப்போர்ட்டுக்கும் அபிப்பிராய பேதம் இருப்பதால்தான் இது வரையிலும் குத்தகை நிர்ணயிக்கப்பட இல்லை. இதைப்பற்றி ஆலோசித்து பரிசீலனை செய்த பிறகு நிர்ணயிக்கப்படும்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்த விதைப் பண்ணைகளுக்கு எடுக்கக்கூடிய விதைகளை சிமிட்டி தரையில் வைத்து பாதுகாக்கப்படுவதால் சரியான விதத்தில் முளை வருதில்லை என்கின்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இதை நல்ல முறையில் பாதுகாக்கப்படுவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விதைகளை சரியான முறையில் பாதுகாக்கப்படுவதற்கு அரசாங்கம் எல்லா முயற்சிகளும் எடுத்து வருகின்றது.

SRI T. S. RAMASAMY PILLAI : குத்தகையை நிர்ணயம் செய்வது கலெக்டர் அவர்களா அல்லது விவசாய இலாகா அதிகாரிகளா ? சீமாவரம் பாரத்திலிருந்து எடுக்கப்பட்ட நிலத்திற்கு நிர்ணயித்திருக்கும் குத்தகையை அதிகப்படுத்தி தரவேண்டும் என்று அந்த நிலச் சொந்தக்காரரிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது மனுக்கள் வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாதாரணமாக கலெக்டர் தான் இதை நிர்ணயிக்கிறார். இம்மாதிரி மனுக்கள் வந்ததாக தெரியவில்லை. இதில் கலெக்டர் அவர்கள் நிர்ணயித்திருப்பது அதிகமாக இருக்கிறது என்று நினைத்துத்தான் இதை பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. ஆகவேதான் இதில் தாமதம் ஏற்படுகின்றது.

[10th February 1959

SRI A. GOVINDASAMY : கலெக்டர் அவர்கள் நிர்ணயித்தது அதிகம் என்று தெரிந்த உடன் விவசாய இலாகா டயரக்டர் அவர்கள் ஏன் அதன் பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதினுல்தான் இதில் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

SRIMATHI T. N ANANDANAYAKI ; இப்போது அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது விதைப்பண்ணைகளை நடத்துவதற்கு நிலங்களுக்கு லீஸிங் வந்துவிட்டால் சரசமாக நிலங்கள் கிடைக்கும் என்று தெரிவித்தார்கள். இம்மாதிரி விதைப் பண்ணைகளுக்கு எடுக்கப்படும் நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க மாட்டார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நஷ்டஈடு கொடுத்தாலும் நிலங்கள் சரசமாக கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: பல ஜில்லாக்களிலும் நடத்தப்பட்டுவரும் விதைப்பண்ணைகளை சர்க்கார் எடுத்துவிடப்போவதாக கேள்விப் பட்டேன். அது உண்மையா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பல பண்ணைகளிலும் அதிகப்படியான அளவில் உற்பத்தி பெருகவில்லை என்று காணப்படுவதால் சில பண்ணைகளை எடுத்துவிடுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI S. NAGARAJA MONIGAR : இம்மாதிரி நிலங்களை வாங்கும்போது பொது மக்களுடைய ஒத்துழைப்பு அவசியம் என்கின்ற முறையில் அந்தந்த இடங்களில் இருக்கின்ற எம்.எல்.ஏ.க்கள், எம்.எல்.ஸி-க்கள் எம்.பி.க்கள் என இவர்களையும் கலந்து முடிவு எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போதும் பொதுவாக விதைப் பண்ணைகளை மேற்பார்வையிடுவதற்கும், அதனுடைய வளர்ச்சிக்காக ஆலோசனை கூறுவதற்கும் ஒரு அட்வைசரி கமிட்டி அமைக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : இதற்கு குத்தகையை நிர்ணயிப்பது கலெக்டர் அவர்களா? அல்லது விவசாய இலாகா அதிகாரிகளாக இவ்விதம் நிர்ணயிக்கும்போது நிலச் சொந்தக்காரர்களுடைய வேண்டுகோளும் கவனிக்கப்படுகிறதா ? இவ்விதம் குத்தகை நிர்ணயிப்பது அக்கம்பக்கத்திலுள்ள நிலங்களை பார்த்துத்தான் குத்தகையை நிர்ணயிக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொதுவாக கலெக்டர் அவர்கள்தான் அக்கம் பக்கத்திலுள்ள நிலங்களுக்கு இருக்கின்ற குத்தகையை கவனித்துபார்த்து, 100-க்கு 40 என்கிற அளவில் மதிப்பு போட்டு பார்த்து இதை நிர்ணயிக்கிறார்கள்.

Special Irrigation Schemes

* 183 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957—58, 1958—59-ல் வடாற்காடு ஜில்லாவில் விசேஷ நீர்ப் பாசன திட்டங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) எவ்வளவு செலவழிக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

	RS. (IN LAKHS).
(*a*) (i) 1957–58	4·40
(ii) 1958–59	3·57
(*b*) (i) 1957–58	4·40
(ii) 1958–59 up to the end of October 1958	2·50